விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 076 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 21 திங்கட்கிழமை (04.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஜெனிவாவின் தீர்மானங்களை முற்றாக நிராகரித்தது இலங்கை




(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன் வைக்கப்பட்ட 46/1 மற்றும் 51/1 தீமானங்களை இலங்கை முற்றாக நிராகரித்துள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரில் இலங்கை மீதான விவாதத்தின்போது, இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை அறிவிக்கும்போதே ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருண திலக்க இதனைத் தெரிவித்தார்.

இலங்கை அர 15



வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை சாந்தனின் உடல் தாங்கிய ஊர்தியினை வழிமறித்த போக்குவரத்து பொலிஸார் ஊர்தியின் சாரதியை கைது செய்ய முயற்சித்தமையால் அவ்விடத்தில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் நிலவியது.

# உடுப்பிட்டியை வந்தடைந்தது சாந்தனின் வித்துடல்

## இறுதிச் சடங்குக்கு இன்று ஏற்பாடு

- வீதி எங்கும் காத்திருந்த பொதுமக்கள்
- தாயகம் எங்கும் கண்ணீர் மல்க அஞ்சலி





(02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்



(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தில் காலவரையறை விதிக்கப்பட்டுள்ள ஒரே தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் எனவும் இதனால், 15

## அவசர சிகிச்சைப் பிரிவில் சிவாஜிலிங்கம் அனுமதி



(சென்னை)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் திடீர் உடல்நலக்குறைவால் சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். 15

## வற் வரியைக் குறைக்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கும் நோக்கில் 18 வீத வற் (VAT) வரியை 15 வீதமாக குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய நிதி அமைச்சும் மத்திய வங்கியும் இணைந்து திட்டங்களைத் தயாரித்து 15

## 'தாயின் கையால் ஒரு வாய் உணவு சாப்பிட வேண்டும்'

### இதுவே சாந்தனின் இறுதி ஆசை



(வல்வெட்டித்துறை)

"தன் தாயின் கையால் ஒரு வாய் உணவு சாப்பிட வேண்டும்" என்பதே சாந்தனின் கடைசி ஆசையாக இருந்தது என அவரின் சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற சாந்தனுக்கான அஞ்சலி 15

### ஆய்வுக் கப்பலுக்குத் தடை

## இலங்கை அதிரடி; ஆத்திரத்தில் சீனா

(கொழும்பு)

இலங்கை அரசியலில் இந்தியா, அமெரிக்காவின் தலையீடுகள் அதிகரித்துள்ளமை தொடர்பில் சீனா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு இலங்கைக்கு வந்த 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுப்பிட்டியை...

தாயகம் திரும்பும் கனவுடன் 33 வருடங்கள் காத்திருந்த சாந்தன் சென்னையில் காலமான நிலையில் அவரின் வித்துடல் நேற்றைய தினம் சொந்த இடமான உடுப்பிட்டிக்கு எடுத்துவரப்பட்டது.

இதன் போது வீதியெங்கும் தமிழ் மக்களும் தமிழ் உணர்வாளர்களும் ஒன்று திரண்டு சாந்தனுக்கான தமது இறுதி அஞ்சலியினை கனத்த இதயங்களுடன் செலுத்தினர்.

சாந்தனின் புகழுடல் தாங்கிய ஊர்தியானது நேற்றுக் காலை 8 மணியளவில் நீர்கொழும்பில் இருந்து வவுனியாவை வந்தடைந்தது.

சாந்தனின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக நேற்று காலை வவுனியா போராளிகள் நலன்புரிச் சங்கத்திற்கு முன்பாகவும், பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும் வைக்கப்பட்டது.

பெருந்திரளாக மக்கள் அங்கு கூடி பூதவுடலுக்கு மரியாதை செலுத்தியதுடன், மலர் மாலை அணிவித்து உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தொடர்ந்து சாந்தனின் புகழுடல் தாங்கிய ஊர்தி மாங்குளம் பிரதேசத்தை சென்றடைந்தது. பெருந்திரளான மக்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர்.

மாங்குளத்தில் இருந்து ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சியை வந்தடைந்தது

கிளிநொச்சியில் சாந்தனின் பூதவுடலுக்கு உணர்வுபூர்வ ரீதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.



சாந்தனின் பூதவுடலை ஏ-9 வீதியிலிருந்து, கிளிநொச்சி பழையபூங்கா வரையில் மக்களால் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு, அஞ்சலி நிகழ்வுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் பூதவுடல் வைக்கப்பட்டது.

இதன்போது, மூத்த போராளி காக்கா ஈகச் சுடரை ஏற்றியதுடன், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தேசிய உணர்வுக் கொடியை போர்த்தி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து பொதுமக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



அதனைத் தொடர்ந்து சாந்தனது புகழுடல் தாங்கிய ஊர்தி ஏ-9 வீதி வழியே எடுத்துவரப்பட்டு இத்தாவில், கொடிகாமம் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளினைத் தொடர்ந்து கலிகைச்சந்தி, துன்னாலை, மந்திகை ஊடாக மாலிசந்திமைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தை ஊர்திப்பவனி வந்தடைந்ததும் அங்கு மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அங்கிருந்து நெல்லியடி மத்திய பஸ் நிலையத்திற்கு பிற்பகல் 3மணிக்கு ஊர்தி வந்துசேர்ந்தது. அங்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.



சாந்தனை சிறையிலிருந்து மீட்பதற்காக நீதிமன்றத்தில் வாதாடிய தமிழகச் சட்டத்தரணி புகழேந்தி இங்கு வந்துள்ளதுடன் நெல்லியடியில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றார்.

இதன் போது சாந்தனுடன் சிறையிலிருந்த முருகனின் தாயார் மற்றும் சிவகுரு ஆதின முதல்வர் வேலன் சுவாமிகள், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோரும் சாந்தனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து சாந்தனின் ஊர்திப்பவனி கரணவாய், நவிண்டில், உடுப்பிட்டி ஊடாக வல்வெட்டித்துறை தீருவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தீருவில் நினைவுச்சதுக்கத்தில் வைக்கப்பட்ட சாந்தனது பூதவுடலானது நேற்று இரவு சாந்தனின் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இதேவேளை திருகோணமலை, முல்லைத்தீவு உள்ளடங்கலாக தாயகத்தின் பெரும்பாலான இடங்களிலும் சாந்தனுக்கு இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த சாந்தனின் உடல் அவரின் சொந்த ஊரான உடுப்பிட்டியில் அமைந்துள்ள வீட்டிற்கு கொண்டுவரப்பட்ட போது சில நெகிழ்ச்சியான சம்பவங்கள் பதிவாகியிருந்தது.

சாந்தனின் உடலை வீட்டிற்கு கொண்டுவரும் போது அவரது உடன்பிறந்த சகோதரி ஆரத்தி எடுத்ததோடு "என் தெய்வம் வீட்டிற்கு வருகின்றது, யாரும் அழக் கூடாது" என அவரது சகோ தரி இதன்போது உருக்கத்துடன் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் தனது மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்க்க வேண்டும் என்று காத்திருந்த தாய் பல ஆண்டுகளுக்கு பின் சாந்தனின் உயிரற்ற உடலை கண்டு கதறி அழுதமை அங்கிருந்தவர்களை கண்கலங்கச் செய்திருந்தது.



சாந்தனின் இறுதிக் கிரியைகள், அவரது இல்லத்தில் இன்று காலை 10:00 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இறுதிக் கிரியைகள் நிறைவு பெற்றதும் வித்துடல் எடுத்து செல்லப்பட்டு ஊரில் உள்ள சனசமூக நிலையத்தில் நினை வேந்தல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து வித்துடல் சாந்தனின் பூர்வீக இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பின் இறுதி யாத்திரை ஆரம்பமாகி பூதவுடல் நல்லடக்கத்திற்காக வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஊடாக எள்ளங்குளம் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும் என ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (ந-7,33,60,250)

## இலங்கை...

ஷி யென் 5 என்ற சீனாவின் ஆய்வுக் கப்பலால் இலங்கை, இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையிலான இராஜதந்திர உறவில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

சீன ஆய்வுக் கப்பல்களின் வருகைக்கு புதுடில்லியில் இருந்து பிரயோகிக்கப்படும் கடும் அழுத்தங்கள் மற்றும் அமெரிக்காவின் தலையீடுகளால் இலங்கை தீவின் அரசியல் கொந்தளிப்பான நிலையிலேயே உள்ளது.

ஷி யென் 5 கப்பல் இலங்கையின் கடற்பரப்பில் மேற்கொண்ட ஆய்வுகளால் இந்தியா தனது கவலையை வெளிப்படுத்தி இருந்தது.

அதனால் கடந்த நவம்பர் மாதம் திட்டமிடப்பட்டிருந்த ஷி யென் 6 கப்பலின் இலங்கை வருகைக்கு புதுடில்லியில் இருந்து கடும் எதிர்ப்புகள் வெளியானது. அதேநேரம் இவ்வாண்டு ஜனவரி மாதம் Xiang Yang Hong 3 கப்பல் கொழும்பு வருகைக்கான அனுமதியும் இலங்கை சீனாவுக்கு வழங்கியிருந்தது.

ஆனால், இந்தியாவின் கடுமையான எதிர்ப்பால் இந்த இரண்டு கப்பல்களின் இலங்கை வருகைக்கு தடை ஏற்பட்டதுடன், 2024ஆம் ஆண்டு முழுவதும் சீன ஆய்வுக் கப்பல்களின் இலங்கை வருகைக்கு அரசாங்கம் இடைக்கால தடை விதித்தது.

இந்த நிலையில், இலங்கையின் நடவடிக்கைகளுக்கு சீனா வெளிப்படையான கவலையை வெளியிட்டுள்ளது. இந்தியாவின் வற்புறுத்தல்களையும் கடுமையான சீன அரசாங்கம் விமர்சித்துள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ந-7)


பதவி வெற்றிடம்

தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு அனுபவமுள்ளவர்களும் பயிலுனர்களும் தேவை.

( ஆண், பெண் இருபாலாரும் )

யாழ் நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

076 097 3121



அந்தியேட்டி

வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 06.02.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்



அமரர் சித்தர் வேலாயுதபிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.03.2024) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (06.03.2024) புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பழைய கமம், முரசுமோட்டை. (C-8461) 077 679 0505

தகவல் குடும்பத்தினர்



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான வீதி முகப்புடன் நான்கு - 4 பரப்பு நிலப்பரப்பு காணி விற்பனைக்குண்டு.

சகல ஆவணங்களுடன் சிவப்புமண், நன்னீர் ஊற்று, கிருஷ்ணன் கோவில் அருகாமை, தரகர் தேவையில்லை.

தொடர்பு :-

077 638 5683,

075 638 5684



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

உற்சாகம்

புத்துணர்ச்சி

ஆரோக்கியம்




(C-8448)

சந்தைப்படுத்துவோர்:

சிவா நறுமணப் பூங்கா®

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(குறிப்பு : சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)

தொ.பேசி : 021 222 2567

Packed By: ROYAL INDUSTRIES® COLOMBO - 12 076 668 8025


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சாந்தனின் திருவுடலுக்கு
# தமிழ் உறவுகள் இதய அஞ்சலி

























(ஙி-5-33-60-100-250-315-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# சமநிலையான பொன் அணிகளின் சமர்






வட்டுக்கோட்டை யாழ்.கல்லூரி மற்றும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அணிகள் இடையிலான 107ஆவது பொன் அணிகளின் சமர் கிரிக்கெட் பெரும் போட்டி சமநிலையில் முடிந்தது.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய இந்தப் போட்டியின் முதல் நாள் ஆட்டம் முடிவில் யாழ்.கல்லூரி முதல் இன்னிங்ஸை (189) அடுத்து ஓட்டங்களை எடுத்து இருந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பத்திரிசியார் கல்லூரி 45 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து இருந்தது.

நேற்று முன்தினம் இரண்டாம் நாளில் தமது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தினை தொடர்ந்த புனித பத்திரிசியார் அணியானது 60.2 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்கள் எடுத்தது.

43 ஓட்டங்கள் முன்னிலை பெற்றவாறு இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை தொடர்ந்த யாழ். கல்லூரி அணி 93 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் தமது ஆட்டத்தை இடைநிறுத்தி போட்டியின் வெற்றி இலக்காக 137 ஓட்டங்களை நிர்ணயம் செய்தது.

வெற்றி இலக்கை அடைய பதிலுக்கு இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பாடிய யாழ்.புனித பத்திரிசியார் அணி 24 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து காணப்பட்ட நிலையில் இரண்டாம் நாள் ஆட்டநேரம் நிறைவடைய போட்டி சமநிலையில் முடிவுபெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## சென்மேரிசை வீழ்த்தியது நியூட்டன்

கட்டைக்காடு சென்மேரிசை வீழ்த்தி சமரபாகு நியூட்டன் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

வடமராட்சி லீக் அனுமதியுடன் AA.SPORTS பிரதான அனுசரணையோடு கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட யாழ் மாவட்ட ரீதியிலான றேஞ்சஸ் வெற்றிக்கிண்ணம் 2024 உதைபந்தாட்ட சுற்று போட்டி கடந்த வியாழக்கிழமை (28) இடம்பெற்றது.

குறித்த போட்டியில் கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது. இரு அணிகளும் ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதல் பாதியாட்டத்தில் நியூட்டன் அணி தமது சிறப்பான ஆட்டத்தின் மூலம் இரண்டு கோல்களை பெற்று முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியாட்டத்தில் தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இரு அணிகளும் கோல்களை பெற்றுக் கொள்வதற்கு கடுமையாக போராடினர். அதன் பயனாக சென்மேரிஸ் அணி தமது அணிக்கான முதலாவது கோலை சிறப்பான முறையில் பதிவு செய்தது. ஆட்டத்தின் முடிவில் மேலதிக கோல்களின்றி 2:1 என்ற கோல் கணக்கில் நியூட்டன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-60)




## முல்லை.மாவட்ட தகுதிகாண் போட்டி இறுதிச்சுற்றுக்கு 16 அணிகள் தெரிவு



முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 14 பாடசாலைகளின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை கரைதுறைப்பற்று பிரதேசசபை மைதானத்தில் இடம்பெற்ற 10 மற்றும் 12 வயதுகளுக்குட்பட்டோருக்கான தகுதிகாண் கால்பந்தாட்டப் போட்டிகளின் ஆண்கள் பிரிவில் 8 அணிகளும் பெண்கள் பிரிவிலிருந்து 8 அணிகளுமாக 16 அணிகள் இறுதிச்சுற்றுப் போட்டிகளில் ஆடுவதற்கு தகுதி பெற்றுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ வர்த்தக நாமத்தின் அனுசரணையில் இடம்பெறும் இப்போட்டித் தொடரை கல்வி அமைச்சின் மேற்பார்வையோடு இலங்கை பாடசாலைகள், கால்பந்தாட்ட சங்கம் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு நடத்தி வருகின்றது.

10 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் இரணைப்பாலை றோ.க. மகா வித்தியாலயம், அளம்பில் றோ.க. மகாவித்தியாலயம், முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க பாடசாலை, குரவில் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் நான்கு அணிகளும் பெண்கள் பிரிவில் உடையார்கட்டு ஆரம்ப பாடசாலை, அளம்பில் றோ.க. மகாவித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளின் நான்கு அணிகளும் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் வவுனியா மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதியும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகள் 16ஆம் திகதியும் யாழ். மாவட்டத்துக்கான தகுதிகாண் போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இறுதி சுற்றுப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (நி-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி சிறைச்சாலையில் கைதிக்கு மூளைக்காய்ச்சல்

(கொழும்பு)

மூளைக் காய்ச்சல் நோய்த்தாக்கத்திற்குள்ளான மற்றுமொரு கைதி காலி சிறைச்சாலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த கைதி கராப்பிட்டிய போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் நிலைமை காரணமாக இதற்கு முன்னரும் காலி சிறைச்சாலை கைதி யொருவரும் மாத்தறை சிறைச்சாலை கைதிகள் இருவரும் உயிரிழந்துள்ளனர். இது தவிர மேலும் சில நோயாளர்களும் பதிவாகியிருந்தனர். (நி-6)

# சமூக ஊடகங்களில் ஆவணங்களை காட்சிப்படுத்துவதை தவிருங்கள்

## குற்றப்புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுகள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் போன்றவற்றை சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துவதைத் தவிர்க்குமாறு சமூக ஊடக பாவனையாளர்களிடம் கணனி குற்றப்புலனாய்வுப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

உரிமையாளர்களைக் கண்டறியும் நோக்கில் தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுகள் போன்றவற்றை சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துவதன் காரணமாக குற்றச்செயல்கள் இடம்பெறலாம் என அப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

தொலைந்த பணப்பையை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நோக்கில் சிலர் பணப்பையில் உள்ள தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டுகள், அலுவலக அடையாள அட்டைகள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றை புகைப்படம் எடுத்து பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துகின்றனர்.

ஆனால் இவ்வாறு தனிநபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்துவதன் மூலம் குற்றவாளிகள் பல்வேறு குற்றங்களுக்கு அந்த தகவல்களைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திம அருமப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# மாணவர்களுக்கான உதவித்தொகைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியுள்ள சுமார் ஒரு இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முதலாம் தரத்தில் இருந்து 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் பொருளாதார நெருக்கடியுள்ள ஒரு இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திட்டத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் "ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் 2024/2025"இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான www.facebook.com/president.fund மூலம் விண்ணப்பப்படிவம் மற்றும் அறிவுறுத்தல்களை மூன்று மொழிகளிலும் பெற முடியும்.

மேலும் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் மாணவர்கள் தாம் கற்கும் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலய/மாகாணக்கல்வி அலுவலகங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் கல்வி அமைச்சு விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையின் தலைமையாசிரியரும் தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு பொறுப்பான குழுவிற்கு தலைமை தாங்குவார். பிராந்திய மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையுடன் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு அளவுகோல்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். செயல்முறை முழுவதும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய வேண்டும்.

இந்த முழு வேலைத் திட்டத்திற்காகவும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 3,600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் நேரடியாக ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்படக் கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் பற்றாக்குறை கடும் நெருக்கடியில் பல வைத்தியசாலைகள்



(கொழும்பு)

கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் பற்றாக்குறை காரணமாக பல மருத்துவமனை செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக கொழும்பு, கண்டி, கராப்பிட்டிய, குருநாகல், பதுளை உள்ளிட்ட பல வைத்தியசாலைகள் கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக அதன் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

நிரந்தர அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறியமையே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-6)

# இராசிபலன்

04.03.2024
மாசி 21, திங்கட்கிழமை
நவமி பின்னிரவு 3.16 மணிவரை

கேட்டை முற்பகல் 11.54 மணிவரை
சுபநேரம் 12.26-1.56 மணிவரை
இராகுகாலம் 7.56-9.26 மணிவரை

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை.

வளவன்

**மேஷம்** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** காலையில் மகிழ்ச்சியாகவும் மாலையில் மனச்சஞ்சலமாகவும் திகழ்வீர்கள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்** விருந்தினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்** பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகும் வாய்ப்புண்டு, கடன்களை அடைக்க புதிய வழியை கையாள்வீர்கள்.

**சிம்மம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கன்னி** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** செய்தொழில் மேன்மையுண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

பாதை இல்லாத போதும் உன் சுவடுகளைப் பதிய வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைமடி படகுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர்கள் கறுப்புக் கொடி போராட்டம்

(கரணவாய்)

**இந்திய இழுவை மடி படகுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடபகுதி மீனவர்கள் வடக்கு கடற்பரப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கறுப்புக்கொடிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.**





தமிழக மீனவர்களின் அத்துமீறல் காரணமாக தமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதுடன் இலங்கையின் கடல் வளமும் சூறையாடப்பட்டதாக தெரிவித்து கடற்றொழிலாளர்கள் குறித்த கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சியின் பருத்தித்துறை தொடக்கம் வடமராட்சி கிழக்கு வரையான கடற்றொழிலாளர்கள் சுமார் 300 இற்கும் மேற்பட்ட கறுப்புக்கொடி கட்டிய படகுகளில் ஆழ் கடலை நோக்கி சென்று அங்கு கறுப்புக் கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளை நெடுந்தீவு கடல் பகுதிக்கு சற்றுத் தொலைவிலும் மீனவர்கள் கறுப்புக் கொடிப் போராட்டத்தை முன்னெடுத்து இருந்தனர்.

இதன்போது நூற்றுக் கணக்கான மீனவர்கள் தமது படகுகளில் கறுப்புக் கொடிகளை பறக்க விட்டு தமது எதிர்ப்பினை வெளிக்காட்டியிருந்தனர். இக் கறுப்புக் கொடிப் போராட்டம் இடம்பெற்றதன் காரணமாக தமிழக மீனவர்கள் நேற்று கடலுக்கு செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-33-60)

# அனுமதியின்றி ட்ரோன் கமரா பறக்கவிட்ட இளைஞன் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதியின்றி ட்ரோன் கமரா பறக்க விட்டமைக்காக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த சனிக்கிழமை மாலை கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவையாறு பகுதியில் இராணுவ முகாம் மீது ட்ரோன் கமரா பறக்க விட்டுள்ளார்.

அதனையடுத்து இராணுவத்தினர் அவரைத் தடுத்து நிறுத்தி விசாரித்த போது தான் குறும்படம் ஒன்றை தயாரிப்பதற்காகவே ட்ரோன் கமராவை பறக்க விட்டதாகவும் வேறு எந்த காரணமும் இல்லை என்று இளைஞன் தெரிவித்துள்ளார்.

எனினும் இராணுவத்தினர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)



ஈழநல்லூர் சாரங்கம் இசைமன்றம் நடத்திய சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 177 ஆவது இசை ஆராதனை விழாவும் மூத்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 260 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 | 450 |
| தக்காளி | 350 | 280 | 125 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 140 | 200 |
| கோவா | 450 | 350 | 350 | 500 |
| கரட் | 300 | 380 | 450 | 600 |
| பூசணி | 260 | 160 | 160 | 300 |
| புடோல் | 200 | 150 | 150 | 250 |
| வாழைக்காய் | 200 | 150 | 120 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 420 | 360 | 350 | 400 |
| பாகற்காய் | 350 | 300 | 430 | 400 |
| வெண்டக்காய் | 300 | 220 | 260 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 150 | 260 | 400 |
| லீக்ஸ் | 400 | 280 | 270 | 400 |
| பீற்றூட் | 300 | 350 | 300 | 400 |
| கறிமிளகாய் | 500 | 400 | 360 | 600 |
| முருங்கைக்காய் | 1300 | 1000 | 1600 | 1500 |
| போஞ்சி | 300 | 300 | 385 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 40-50 | 80 |
| தேசிக்காய் | 200 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 110 | 60-110 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 350 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 140 | 300 |
| முள்ளங்கி | 200 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 90 | 120 | 60 |
| வல்லாரை | 50 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 50 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ள அநுர



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க வடக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிய வருகின்றது.

எதிர்வரும் 16 ஆம் திகதி கிளிநொச்சிக்கு முதலில் விஜயம் செய்யும் அவர், கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் மக்கள் சந்திப்பில் பங்கேற்கவுள்ளதோடு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பிற்பகலுக்குப் பின்னர் வவுனியாவில் நடைபெறும் மக்கள் சந்திப்பில் அவர் பங்கேற்கவுள்ளதோடு அங்கும் பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள அவர், இரண்டு நாட்கள் தங்கியிருந்து பொதுமக்கள் சந்திப்பில் பங்கேற்று தொடர்ந்து தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

குறிப்பாக, இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு தற்போது ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (நி)

# இலங்கைத் தமிழரை வஞ்சித்த தமிழக அரசு முன்னாள் தமிழக முதல்வர் விமர்சனம்



(சென்னை)

சென்னை - திருச்சி முகாமில் உள்ள முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரை விடுவிக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய வெளியுறவுத் துறையையும் முதல்வரையும் அ.தி.மு.க பொதுச்செயலாளரும் முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

திருச்சி சிறப்பு முகாமில் இருந்த சாந்தன் உயிரிழந்த நிலையில், இது தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழக சிறையில் 32 ஆண்டுகால நீண்ட சிறைவாசம் அனுபவித்த இலங்கைத் தமிழர்கள் ராபர்ட் பயஸ், ஜெயகுமார், முருகன், சாந்தன் ஆகியோர் 11.11.2022 அன்று உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் 32 ஆண்டுகால நீண்ட சிறைவாசத்திற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட வயது முதிர்ந்த 3 இலங்கைத் தமிழர்களுக்கு உண்மையான விடுதலை வழங்காத தி.மு.க அரசுக்கு கண்டனம் தெரிவிக்கின்றேன்.

திருச்சி முகாமில் அவர்கள், சக முகாம்வாசிகள் யாருடனும் பேசவோ, பழகவோ, உடற்பயிற்சி, நடைபயிற்சி செய்யவோ அனுமதி மறுக்கப்பட்டு தனிமை அறையில், சிறை போலவே அடைக்கப்பட்டிருந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாந்தன், கடந்த 28.02.2024 அன்று உடல்நலக் குறைவால் மரணமடைந்துள்ளது தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சாந்தனின் மரணத்திற்கு தி.மு.க அரசே முழு பொறுப்பை ஏற்க வேண்டும்.

இனியாவது, மீதமுள்ள மூன்று பேரின் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலித்து, கண் பார்வை குறைபாடு ஏற்பட்டு தவறான சிகிச்சையில் ஒரு கண்ணில் பார்வையை இழந்த ஜெயகுமார் மற்றும் உடல்நலக் குறைவால் அவதியுறும் ராபர்ட் பயஸ் மற்றும் முருகன் ஆகியோரது கடைசிக் காலத்தில் எஞ்சிய வாழ்நாளை அவர்களுடைய குடும்பத்தினருடன் வசிப்பதற்கு திருச்சி முகாமில் தனிமைச் சிறையில் இருந்து அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய வெளியுறவுத் துறையையும் தி.மு.க அரசின் முதலமைச்சரையும் வலியுறுத்துகிறேன் எனத் தெரிவித்துள்ளார். (நி)

# செங்கடலை நோக்கி 2 ஆவது கப்பல்

(கொழும்பு)

சர்வதேச கடற்பரப்பில் கடல்சார் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கான நடவடிக்கைக்கு இலங்கை தனது இரண்டாவது கப்பலை அனுப்பவுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முதலாவது கப்பல் தனது நடவடிக்கையினை பூர்த்திசெய்த பின்னர் இரண்டு நாட்களிற்கு முன்னர் இலங்கை திரும்பியுள்ளது என கடற் படையின் ஊடக இய க்குநர் கப்டன் தயான் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை எஸ் எம்எஸ் கஜபா என்ற கப்பலை 100 கடற்படையினருடன் அனுப்பியது.

சரக்கு மற்றும் மீன்பிடி கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே இலங்கை இந்த கப்பலை அனுப்பியது. இணைந்த கடல்சார் படையணியுடன் சேர்ந்து செயற்பட்டு இந்து சமுத்திரத்தில் போதைப் பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதும் நோக்கமாகயிருந்தது என தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடற்படை நடவடிக்கைக்கு இரண்டாவது க்கப்பலை அனுப்புவதற்கு இலங்கை தயாராகி வரு கின்றது மேலதிக தகவல் களை வெளியிட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:சுவாதி
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L Manager (Pvt)
எதிர்பார்ப்பு: பட்டதாரி.வெளிநாடு
தொ.இ: B/14041

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: -
உயரம்: 6
தகைமை/தொழில்: A/L (வியாபாரம்) (சொந்தம்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14045

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம் : பூசம்
கி.பா: -
சூரியசெவ் 08 இல்
உயரம்: 6
தகைமை/தொழில்: வியாபாரம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்.
தொ.இ: B/14046

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம் : ரோகிணி
கி.பா: 8 1 /2
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்: A/L (சாரதி)
எதிர்பார்ப்பு: குணமுள்ள பெண்
தொ.இ: B/14047

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 52
உயரம்: 165cm
தகைமை/தொழில்:QS(Gov)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. நிரந்தர தொழில்
தொ.இ: G/14065

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 31
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Bsc(Hons),Msc(Reading),Associate Survey (Pvt)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. நிரந்தர வேலை
தொ.இ:G/14066

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 56
உயரம்: 158cm
தகைமை/தொழில்: Bsc,(Pharmacy),Msc,Demo
எதிர்பார்ப்பு: வெளிநாடு. பட்டதாரி
தொ.இ:G/14074

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 11 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma in Teaching,Teacher
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ:G/14008

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# அன்னம் சின்னத்தில் களமிறங்கும் ரணில்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அன்னம் சின்னத்தில் பொதுக் கூட்டணியில் போட்டியிடவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் தனது நட்புக் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து தேசிய வேட்பாளராக போட்டியிடுவதே ஜனாதிபதியின் விருப்பமாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

ரணில் விக்கிரம சிங்கவின் கட்சி தற்போது நிமல் லான்சா குழு மற்றும் பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த சிரேஷ்டர்கள் குழுவின் தலைமையிலான பல சிறு கட்சிகளின் ஆதரவைப் பெற திட்டமிட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் போன்றவர்கள் ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடன் நெருங்கிய தொடர்புள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# சீனாவுடன் கைகோர்த்த பாகிஸ்
# இந்தியாவிற்கு காத்திருந்த பேர

**(டில்லி)**

**சீனாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் அணு ஆயுத பொருட்களை பாகிஸ்தான் பெற்று ரொக்கெட் உற்பத்திகளுக்கு பயன்படுத்த திட்ட மிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**






சீனாவில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி நகரை நோக்கி சென்ற சி.எம்.ஏ. சி.ஜி.எம். ஆட்டிலா என்ற வர்த்தக கப்பல் ஒன்று மும்பை-நவசேவா துறைமுகம் பகுதியில் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

குறித்த கப்பலானது. உளவுப் பிரிவின் அடிப்படையில் கிடைகப்பெற்ற தகவலின் படி சோதனையிடப்பட்டது.

மால்டா நாட்டு கொடியுடன் தடுத்து நிறுத்தப்பட்ட அந்த கப்பலில் அணு ஆயுத திட்டத்திற்கு பயன்படுத்தப்பட கூடிய பொருட்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாமென அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து. மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில்

---

## காசா மக்களுக்கு வான்வழியாக நிவாரண பொருட்கள் அனுப்பியது அமெரிக்கா



(காசா)

இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் காரணமாக காசா மிகப்பெரிய பாதிப்பை அடைந்துள்ளது. அங்குள்ள பொதுமக்கள் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

வடக்கு காசாவில் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இஸ்ரேல் இராணுவம்அனுமதித்தால் மட்டுமே மனிதாபிமான அடிப்படையிலான உதவிப் பொருட்கள் காசா மக்களுக்கு சென்றடையும் நிலை உள்ளது.

காசாவின் மேற்கு பகுதியில் நிவாரணப் பொருட்கள் வழங்க இஸ்ரேல் இராணுவம் சம்மதம் தெரிவித்தது. அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் உடனடியாக போர் நிறுத்தம் தேவை என வலியுறுத்தி வந்தன.

இதற்கிடையே, காசாவில் அமெரிக்க இராணுவம் வான் வழியாக உதவிப் பொருட்களை காசா மக்களுக்கு வழங்கும். ஜோர்டான் மற்றும் சில நாடுகளுடன்இணைந்து இந்த பணியில் ஈடுபட உள்ளோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க இராணுவம் வான் வழியாக காசா மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தது.

முதல் கட்டமாக 38,000 இற்கும் மேற்பட்ட உணவு [illegible] அனுப்பி வைத்துள்ளது. (நி)

## உலகில் மிகப்பெ
## நிலையம் அமைக்கு

(ரியாத்)

உலகிலேயே மிகப் பெரிய விமான நிலையத்தை அரபு நாடான சவுதி அரேபியா அமைத்து வருகிறது. `சவுதி தலைநகரான ரியாத்தில் கிங் சல்மான் என்ற இந்த சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

அதில் சுமார் 57 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவு கொண்ட ஆறு ஓடுபாதைகள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் கிங் சல்மான் சர்வதேச விமான நிலையம் அப்பகுதியில் சுமார் 150,000 வேலை வாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஸ்தான்
# ரதிர்ச்சி



கப்பலில் இத்தாலி நாட்டு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட கணனியால் கட்டுப்படுத்தக் கூடிய சி.என்.சி. இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கண்டறியப்பட்ட பொருட்களை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பை சேர்ந்த குழுவினரும் ஆய்வு செய்த நிலையில் அணு ஆயுத திட்டத்திற்கு பாகிஸ்தான் இதனை பயன்படுத்தக்கூடும் என அதிகாரிகள் தரப்பில் உறுதிசெய்துள்ளனர்.

மேலும், இந்தப் பொருட்கள் பாகிஸ்தானின் இராணுவ வளர்ச்சி திட்டத்திற்கான முக்கிய பொருட்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படுமென நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

## கிரீமியா பாலத்தை தாக்க ஜேர்மனி திட்டமிட்டதா?
# ரஷ்யாவின் குற்றச்சாட்டால் பரபரப்பு

(மொஸ்கோ)

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து கொண்டிருக்கிறது. இதில் உக்ரைனுக்கு ஆதரவு அளித்து வரும் அமெரிக்கா, மேற்கத்தேய நாடுகள் தொடர்ந்து ஆயுத உதவிகளை செய்து வருகிறது.

ஆனாலும் போரில் ரஷ்யாவின் கையே ஓங்கி உள்ளது. உக்ரைனின் சில நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றின. போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, நேட்டோ அமைப்பு தங்களது படைகளை அனுப்பினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்து உள்ளது.

இந்த நிலையில் ரஷ்யாவின் கிரீமியா பாலத்தை ஏவுகணை மூலம் தாக்க ஜேர்மனி திட்டமிட்டதாக ரஷ்யா குற்றம் சாட்டியது. இது தொடர்பாக ஜேர்மனி இராணுவ அதிகா ரிகள் பேசும் ஆடியோ வெளியாகி உள்ளது. அதில் கிரீமியா பாலத்தில் தாக்குதல் நடத்துவது குறித்து சாத்தியக் கூறுகள் ஜேர்மனி இராணுவ ஜெனரல்கள் விவாதித்த பதிவு இருப்பதாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்து உள்ளன.

நீண்ட தூர டாரஸ்ஏவுகணைகளை பயன்படுத்துவது உட்பட கிரீமியா பாலத்தின் மீது தாக்குதல் நடத்துவது குறித்து ஜேர்மனி இராணுவ அதி காரிகள் பரிசீலித்தனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனி அதிகாரிகள் இடையே நடந்த உரையாடல் மூலம் நேட்டோ படையின் உண்மை முகம் தெரிய வந்துள்ளது. உக்ரைனில் நேட்டோ இராணுவ நடவடிக்கைகள் குறித்து ரஷ்யா உறுதியாக நம்புகிறது என்றார்.

உக்ரைன் போரில் மற்ற நாடுகள், நேட்டோ அமைப்பு தலையிட கூடாது என்று ரஷ்யா எச்சரித்து வரும் நிலையில் ஜேர்மனி அதிகாரிகளின் ஆடியோ விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது மிகவும் தீவிரமான விடயம். இதனால் மிகவும் கவனமாகவும், தீவிரமாகவும் விரைவாகவும் விசாரிக்கப்பட்டு வருகிறது என்றார். இதற்கிடையே ஆடியோ விவகாரம் தொடர்பாக முழு விசாரணைக்கு ஜேர்மனி அதிபர் ஓலாப் ஸ்கோல்ஸ் உத்தரவிட்டு உள்ளார். (நி-6)

# உக்ரைன் மீது ரஷ்யா ஆளில்லா விமானத் தாக்குதல்

(மொஸ்கோ)

ரஷ்ய இராணும் உக்ரைனின் தெற்கு கடற்கரை நகரான ஒடிசா உள்ள அடுக்கு மாடி குடியிருப்பு மீது ஆளில்லா விமானத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இந்த தாக்குதல் நேற்று இடம்பெற்றுள்ளது. தாக்குதல் காரணமாக இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர். இதே வேளை ஆறு பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா பொது மக்கள் மீது தொடர்ந்தும் தாக்குதலை ந்டத்திவருவதாகவும் ஆளில்லா விமானம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக இதுவரை 18 அடுக்குமாடிகள் அழிந்துள்ளதாகவும் உக்ரைனின் ஜனாதிபதி விளாடிமீர் ஜெலன்ஸ்கி குற்றம் சுமத்தியுள்ளார். ஈரானால் வழங்கப்பட்ட ஆளில்லா விமானங்கள் ஊடாக உக்ரைனின் பல பகுதிகளை ஊடுருவி தாக்கிவருவதாகவும் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)




# பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்கிறார் ஷெபாஸ்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தேசம் தனது வழக்கமான பொருளாதார மற்றும் பாதுகாப்பு சார்ந்த சவால்களுடன் புதிதாக தேர்தல் முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட் டுகளுக்கு மத்தியில் 33 ஆவது பிரதமரை இன்று தேர்வு செய்கிறது.

பாகிஸ்தான் முஸ்லீம் லீக்- நவாஸ் (பிஎம்எல்-என்) மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) ஆகியவற்றின் கூட்டுத் தேர்வாக பிரதமர் நாற்காலி யில் அமரவிருக்கும் ஷெபாஸ், அதற்கான வேட்பு மனுவை சமர்ப்பித்துள்ளார். (நி)

# பெரிய விமான
# கும் சவுதி அரேபியா



புகளை உருவாக்குவதற்கும் எதிர்பார்ப்பதாக கூறப்படுகிறது.

மேலும் 2030 ஆம் ஆண்டு இந்த விமான நிலையம் திறக்கப்படுமாயின் சுமார் 12கோடி பயணிகள் பயணம் செய்ய ஏற்ற வசதிகள் காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தோடு, சவுதி அரேபியாவின் எல்லையை ஒட்டிய ஏமனில் மோதல்கள் நடந்து கொண்டிருந்தாலும் ரியாத் போன்ற இடங்கள் பயணத்திற்கு பாதுகாப்பான பிரதேசங்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆப்கானில் கடும் பனிப்புயல் 15 பேர் வரை உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடும் பனிப்பொழிவு காரணமாக கடந்த 3 நாட்களில் மாத்திரம் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 30 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் பனிப்பொழிவினால் கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சியரா நெவாடா பகுதியில் பெரும் பனிப்புயல் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக யோசெமிட்டி தேசிய பூங்கா உள்ளிட்ட சில பகுதிகளை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அந்தப் பகுதிகளில் 10 அடி வரை பனிப்பொழிவு ஏற்படும் அபாயம் இருப்பதால் நெடுஞ்சாலை உள்ளிட்ட சாலைகள் மூடப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நத்தைச்சூரி


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name- Borreriahi spida**
**Family- Rubiaceae**

இச்செடியானது ஓராண்டு, சிலவேளைகளில் பல்லாண்டு வாழக்கூடியதாகும். ஓட்டிப் படரக் கூடியது தண்டு நீளமாக இருக்கும். நாற்சதுரமான உரோமிங்களை கொண்டதாகும். தனியிலை, எதிரிலை, அடுக்கம் எனக் காணப்படும். 1.2-25 செ.மீ நீளம், இலையின் இரு புறங்களிலும் மயிர்கள் போன்ற அமைப்பும் காணப்படும். இதன் இலைகள் நீள்வட்ட அல்லது கோளவடிவ அமைப்பை கொண்டு இருக்கும்.



இருபாலான ஒழுங்கான பூக்களாகவும் ஊதா நிறமுடையதாகவும் இருக்கும். உலர்ந்த மூடிய அமைப்புடைய பழங்கள் 3 மி.மீ நீளமுடையதாகும். வழு வழுப்பான விதைகள் மண்ணிறமுடையது. பங்குனி மாதத்திலிருந்து ஆவணி மாதம் வரை பூக்களை அவதானிக்கலாம்.

### பரம்பலும் இன விருத்தியும்

கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் பரம்பல் அதிகம். வெப்ப பிரதேசங்களில் அதிகம் காணலாம். விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம். இதன் வேர் நன்னாரி வேரைப் போலிருக்கும். யாழ்.மாவட்டத்தில் இதன் பரம்பல் அதிகம்.

### மருத்துவ பயன்கள்

இதன் முழுச் செடியும் மருத்துவக் குணம் மிக்கவையாகும். இதன் விதைகள் உரல் உரமாக்கி உடல் தேற்றி செய்கையுடையது. இதன் விதைகளை சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி கோப்பி விதைகளிற்கு நல்ல பலத்தை கொடுக்கும்.

**நத்தைச் சூரி விதைக் கோப்பி தயாரிக்க தேவையானவை.**

கொத்தமல்லி- 200 கிராம், நத்தை சூரி விதை-50 கிராம், நத்தை சூரி வேர் -50 கிராம், ஏலம்-10 கிராம், சுக்கு-25 கிராம்

இவை அனைத்தையும் கழுவி உலர்த்தி வறுத்து பொடியாக பயன்படுத்தலாம். கோப்பி அடிக்கடி பருகுவதால் Caffine எனும் வேதியல் பொருளால் ஏற்படும் பக்க விளைவுகளையும் தடுப்பதோடு மட்டுமன்றி உடலிற்கு வலுவை கொடுக்க கூடிய நத்தைச்சூரி கோப்பியாகும் விதைகளை பொடித்து 2 கிராம் அளவு வெந்தயம் உட்கொள்ள வயிற்றோட்டம் குணமாகும்.

**நத்தைச்சூரி பற்பொடி**

நத்தை சூரி வேர்-50 கிராம், நெற்பதர் சாம்பல்-120 கிராம், கருவேலன் பட்டை-50 கிராம், கராம்பு-10 கிராம்

மேற்படி அனைத்தையும் பொடித்து நுண்ணிய பொடியாக்கி துணியில் அரிந்து வைத்துக் கொள்ளவும். இதனைப் பற்பொடியாகப் பயன்படுத்தி பல்துலக்கி வர பற்களின் கறைகள் நீங்கி வெண்மையாக வருவதுடன், பற்களுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்.

நத்தைச்சூரி வேரையும், வெள்ளுள்ளியையும் சம அளவு எடுத்து இடித்து நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி உடலுக்கு பூசி வர சத்தி வாத, பித்த, கப நோய்கள் அகலும்.

நத்தைச்சூரியை நன்கு கழுவி வாயில் வைத்து மென்று துப்பினால் வாய் நாற்றம் நீக்குவதோடு பற்களிற்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

இதன் பச்சை வேர்களை நன்கு இடித்து 15 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் 20 நிமிட நேரம் ஊறவைத்து வடித்து வாய் கொப்பளித்து வர (mouth wash) பல் வலி குறையும்.



நத்தை சூரி இலைகளை கீரையாக சமைத்து உண்டு வர தேகத்திற்கு பலத்தையும், அதை வலுப்படுத்த தேவையான ஊட்டச் சத்துக்களும் கிடைக்கப் பெறும்.

# இன்று ஒரு தகவல் 55


தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மூவகை குணங்கள்

ஒரு செல்வந்தர் ஒரு காட்டு வழியாக போய்க் கொண்டு இருந்தார். வழிப்பறி செய்யும் திருடர்கள் 3 பேர் அவரை பார்த்து விட்டார்கள் சும்மா விடுவாங்களா ஓடி வந்து சுத்திநின்றார்கள். என்ன வைத்து இருக்கிறாய் மரியாதையாகக் எடுத்துக்கொடுத்துவிடு என்று மிரட்டினார்கள். அவருக்கு உயிர் தானே முக்கியம் அதனாலே இருக்கிற எல்லாவற்றையும் கொடுத்து விட்டார்.

அவர்களும் எல்லாவற்றையும் பறித்து விட்டார்கள். சரி நாம ஓடிப் போகலாம் என்று புறப்படும் நேரம் அந்த மூன்று திருடன்களில் ஒருத்தன் யோசிக்க ஆரம்பித்தான். "இவனை உயிரோட விட்டு வைக்கிறதால என்ன லாபம்?" என்று சொல்லிக் கொண்டே கத்தியை கையில எடுத்தான். அந்த ஆளை வெட்டப்போனான்.

இன்னொரு திருடன் இதை பார்த்தான் அவனைத் தடுத்து நிறுத்தி னான். வேணாம்பா ! இவனை கொல்லுவதனால் என்ன லாபம். இவனுடைய கை காலை கட்டி இங்கேயே போட்டு விட்டு போய் விடுவோம் என்றான்.

அதுவும் சரி தான் என்று தோன்றியது.மூன்று பேரும் சேர்ந்து அந்த ஆளின் கையையும் காலையும் கயிற்றினால் சேர்த்து நல்லா இறுக்கிக் கட்டினார்கள். அதற்கு பின்பு சாலை ஓரமாக அவரை தூக்கிப்போட்டு விட்டுபோய் விட்டார்கள். கொஞ்ச நேரம் ஆகியது. மூன்றாவது திருடன் மறுபடியும் அந்த இடத் திற்கு வந்தான். சாலை ஓரமாக கிடந்த அந்த ஆளை பார்த்து இரக்கப் பட்டான்.

ஐயோ பாவம்! உனக்கு வலிக்கிறதா என்று கேட்டான். கொஞ்சம் இரு இந்த கட்டை எல்லாம் அவிழ்த்து விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு அந்த கட்டை அவிழ்த்து விட்டான். அதன் பின்பு என்னோடு வா வழி உனக்கு வழி காட்டுகிறேன் என்று தன்னோடு அழைத்து கொண்டு சென்றான். அதோ தெரியுது பார் உன்னுடைய வீடு. போய்ச் சேர் என்று சொல்லினான்.

அந்த ஆளு சொன்னார். ஐயா நீங்கள் எனக்கு மிகப்பெரிய உதவி செய்து உள்ளீர்கள் அதனால் என்னுடைய வீட்டிற்கு வாங்க எல்லோரும் சந்தோசப்படுவார்கள் என்று கூறினான். அதற்கு திருடன் அதை மறுத்து கூறினான்.நீ சொல்கிற மாதிரி நான் வருவதாக இல்லை. வரக்கூடிய தகுதியும் எனக்கு இல்லை. அப்படி நான் வந்தாலும் காவலர்கள் என்னைப் பிடித்து விடுவார்கள் என்று சொல்லி இவரை அனுப்பிவிட்டு அவன் பழையபடி காட்டிற்கு சென்று மறைந்துவிட்டான்.

ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்ன கதை இது. எதற்காக இதை சொன்னார் இந்த உலக வாழ்க்கை ஒரு காடு மாதிரி இந்தக் காட்டில மூன்று திருடர்கள் இருக்கிறார்கள் அவர்கள் யார் யார் தெரியுமா? சத்துவ குணம்-ரஜோ குணம்-தமோ குணம் இவர்கள் தான் அந்த மூன்று திருடர்கள்.

ஜீவாத்மா ஆகிய மனிதன் காட்டு வழியாக போகிறான். அவனிடம் உள்ள பொருள் என்ன? புனிதம் நிறைந்த ஆத்ம ஞானம் அதிக விலை உயர்ந்த பொருள். அதை இந்த மூன்று திருடர்களும் வழிப்பறி செய்தார்கள். தமோ குணம் தான் முதல் திருடன் அவனை ஒரே அடியாக அழிப்பதற்கு முயற்சி செய்யுது. ரஜோ குணம் ஒருத்தனை லௌகீகத்திலே பிணைக்கிறது. அதனாலே ஆசைகள் வளர்கிறது. பந்தங்கள் அற அவனை சங்கிலியாலே கட்டுப்படுத்துகிறது. இந்த மூன்று திருடர்களும் நமக்கு உள்ளேயே இருக்கிறார்கள். சத்துவ குணம்- என்ன செய்கிறது

உலக பந்தங்களில் இருந்தும்-ரஜோ தமோ குணங்களின் கொடுமையான உடும்புப் பிடிகளில் இருந்து ஒருத்தனை காப்பாற்றுகிறது. இருந்தாலும் சத்துவ குணமும் ஒரு திருடன் தான்.அதுவே நம்மை கடவுளிடம் அழைத்து கொண்டு போய் விடாது. "அதோ பார் உன்னோட வீடு போய் சேர்". என்று கையை காட்டி விட்டு போய் விடும் .

சத்துவ குணம் உயர்ந்தது தான் . இருந்தாலும் அதை விட பெரிய நிலை ஒன்று உள்ளது. அது இறைமயமாகவே ஆகிவிடுகிற ஞானியின் நிலை. மூன்று குணத்தையும் கடந்து போனால் தான் ஒருவன் பிரம்ம ஞானத்தை அடைய முடியும். இது தான் ஸ்ரீராம கிருஷ்ணருடைய கருத்து. இதை அடிப்படையாக வைத்து நாம் எந்த நிலையில் இருந்து கொண்டு இருக்கிறோம் என்று யோசித்துப்பாருங்கள். எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு பெரிய பணக்காரர் வீட்டிலே தனியாக இருக்கிறார். வீட்டுக்கார அம்மா கோயில் சென்று இருந்தார். அந்த நேரம் மூன்று திருடர்கள் உள்ளே வந்தார்கள். கத்தியை காட்டி மிரட்டி நகை பணம் எல்லாவற்றையும் சுருட்டி கொண்டு போனார்கள். அவங்க யாருமே அவரை கட்டி போட வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால் இவரே அவர்களைப் பார்த்து கையெடுத்துக் கும்பிடுகிறார். ஐயா நீங்க திருடிக் கொண்டு போவதை பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால் என் கவலை வேறு அதற்கு நீங்கள் ஒரு ஒத்தாசை செய்ய வேண்டும் என்றார். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.

என்னை இந்த நாற்காலியில் சேர்த்து கட்டிப்போட்டு என் வாயில் கொஞ்ச துணியை வைத்த அடைத்து விட்டு போய் விடுங்கள் என்று கேட்டார். திருடர்களுக்கு ஆச்சரியம் ! ஏன் அப்படி சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஆள் சொன்னார் நீங்க அப்படி என்னை கட்டி போடவில்லை என்றால் நகை,பணம் எல்லாவற்றையும் நானே திருடி விட்டேன் என்று என்னுடைய மனைவி சந்தேகப்படுவாள் அதற்காக தான் அப்படி சொன்னேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்ணிமுறிப்புக் குளத்தில் 2,700 ஏக்கரில் சிறுபோகம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டம் தண்ணிமுறிப்புக் குள சிறுபோக நெற்செய்கைக் குழு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு குமுழமுனை கமநல அபிவிருத்தி நிலையத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் (நிர்வாகம்) தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சிறுபோக நெற்செய்கைக்கான காணியின் அளவு தீர்மானிக்கப்பட்டது. குளத்தின் நீர் மட்டத்தின் படி 2,150 ஏக்கரில் தான் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும் ஆனால் கழிவு வாய்க்கால்களை மறித்து செய்கை மேற்கொள்வதன் மூலமும் விவசாயிகளின் வேண்டு கோளுக்கமைவாகவும் 2,700 ஏக்கரில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-6-350)

## நடமாடும் மருத்துவமுகாம் சேவையினை ஏற்படுத்தி தாருங்கள்

### மன்னாகண்டல் கிராம மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மன்னாகண்டல் கிராமத்திற்கு மாதத்தில் இரு தடவைகள் நடமாடும் மருத்துவமுகாம் சேவையினை நடத்துவதற்கு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

315 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் இருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனைக்கும் 12 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கும் நோயாளர்கள் சென்று வருவதில் போக்குவரத்து நெருக்கடிகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் மன்னாகண்டல் கிராமத்திற்கு மாதத்தில் இரு தடவைகள் குறித்த சேவையினை நடத்துவதற்கு உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-350)



அபுதாபி கிண்ணம் 2024 சர்வதேச உதைபாட்ட தொடரில் 12 வயது பிரிவில் இலங்கை அணி சார்பாக பங்குபற்றிய கிளிநொச்சியை சேர்ந்த சுரேஸ்கண்ணா தனுஸ் என்ற சிறுவனை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:தேவானந்தம்)

## 499 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவு பயிர்ச்செய்கை

(தருமபுரம்)

இரணைமடு ஏற்று நீர்ப்பாசன திட்டத்தின் மூலம் 499ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவு பயிர்கள் மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இரணைமடு குள நீரைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் ஏற்று நீர்ப்பாசன உப உணவு பயிர்ச்செய்கை அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போதே குறித்த நிலப்பரப்பில் உப உணவு பயிர் மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. (நி-6-316)







பாலராஜ்




துஷ்யந்தி




ஜெய்ராம்




சீதயாளி




மதுசன்




தாரகை




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 422





அப்போது சிறிது அசந்து விட்டேன். அந்தச் சமயம் பார்த்து என் கத்தியைத் தட்டிவிட்டீர்கள்.

"போகட்டும் அந்தப் பெண் யார்? அவள் எதற்காக எனக்குச் செய்தி அனுப்ப வேண்டும்?"

"ஐயா! அவள்தான் பூங்குழலி."

"அழகான பெயர். ஆனால் நான் கேள்விப்பட்டதில்லை."

"ஐயா! 'சமுத்திர குமாரி' என்ற பெயர் நினைவிருக்கிறதா?"

"சமுத்திரகுமாரி சமுத திரகுமாரி அப்படி ஒரு பெயரும் எனக்கு நினைவில் இல்லையே! அவளைப் பார்த்ததாகக் கூட ஞாபகம் இல்லையே!"

"தயவு செய்து கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். தங்களுக்கு நினைவில்லையென்றால் அந்தப் பெண்ணின் நெஞ்சு உடைந்துவிடும். கோடிக்கரையில் தாங்கள் மரக்கலம் சேருவதற்காகப் படகில் ஏறச் சித்தமாயிருந்தீர்கள். அச்சமயம் ஒரு பெண் தன்னந் தனியாகப் படகு விட்டுக் கொண்டு கடலிலிருந்து கரைக்கு வந்தாள். தாங்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அவளும் நீங்கள் எல்லோரும் யார்' என்று தெரிந்து கொள்வதற்காக நீங்கள் நின்ற இடத்துக்குச் சமீபமாக வந்தாள். 'இந்தப் பெண் யார்?' என்று தாங்கள் கலங்கரை விளக்கத் தலைவரைக் கேட்டீர்கள். அவர் 'இவள் என் குமாரி' என்றார். தாங்கள் உடனே 'ஓகோ! இவள் உமது குமாரியா? சமுத்திர குமாரி என்றல்லவா நினைத்தேன்!' என்றீர்கள். அதை அந்தப் பெண் மறக்காமல் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்ணின் உதவியினால்தான் நான் கடல் கடந்து இலங்கைக்கு வர முடிந்தது."

"நீர் சொன்ன பிறகு எனக்கும் இலேசாகக் கொஞ்சம் நினைவுக்கு வருகிறது. ஆனால் கோடிக்கரை சமுத்திர குமாரிக்கு இங்கே அநுராதபுரத்துக்குச் சமீபத்தில் என்ன வேலை? இவர்களுடன் எதற்காக வந்திருக்கிறாள்? ஒரு வேளை உம்மைத் தேடிக் கொண்டா?"

"இல்லை அப்படி ஒரு நாளும் இராது. என்னைத் தேடி வர நியாயம் இல்லை. யாரையாவது தேடி வந்திருந்தால் அது தங்களைத் தேடித்தான் இருக்க வேண்டும். எதற்காக என்று எனக்குத் தெரியாது!"

இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் சற்றுத் தூரத்தில் சேனாதிபதியின் பக்கத்தில் வந்து கொண்டிருந்த பூங்குழலியைப் பார்த்தான். அவள் தலைகுனிந்த வண்ணம் நடந்தாள். ஆயினும் அவளுடைய கவனம், கருத்து எல்லாம் இளவரசரிடமே இருக்கின்றன என்பதை உணர்ந்து கொண்டான். சிறிது நேரத்துக்குக் கொரு தடவை அவளுடைய கடைக் கண் இளவரசரை நோக்குவதையும் அறிந்தான். அச்சமயம் அவளைப் பற்றித் தாங்கள் பேசுகிறோம் என்பதும் உள்ளுணர்வினால் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அப்படி அவள் குனிந்த தலை நிமிராமல் நடப்பதற்கு யாதொரு அவசியம் இல்லையே! அம்மம்மா! ஒரு கணமும் பார்த்த திசையைப் பாராமல் ஓயாமல் சலித்துக் கொண்டிருக்கும் கண்கள் அல்லவா அவளுடைய கண்கள்!

மேற்கூரையில்லாமல் வேலைப்பாடான கருங்கல் தூண்கள் மட்டும் நின்ற மண்டபத்தை அவர்கள் அடைந்தார்கள். சுற்றிலும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் அந்த மண்டபத்துக்கு ஓரளவு நிழலை அளித்தன. மண்டபத்தின் மத்தியில் ஒரு மேடான பீடமும் இருந்தது. அங்கே சென்று இளவரசரும் சேனாதிபதியும் பார்த்திபேந்திரனும் அமர்ந்தார்கள். வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் சற்றுத் தள்ளி நின்றார்கள்.

இன்னொரு பக்கத்தில் ஒரு தூணின் மறைவில் பூங்குழலி நின்று கொண்டிருந்தாள். அங்கிருந்தபடி அவள் இளவரசரையும் வந்தியத் தேவனையும் பார்க்கக் கூடியதாயிருந்தது.

அந்தக் கூரையில்லாத மண்டபத்தைச் சுற்றிலும் வீரர்கள் வியூகம் வகுத்தது போல் இரண்டு வரிசையாக நின்றார்கள். இன்னும் சற்றுத் தூரத்தில் குதிரைகளும் யானையும் நிறுத்தப்பட்டிருந்தன. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## யார் அழகு?

(தொடர்ச்சி)

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.

"எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பலகீனமாக உதவி கேட்டது.

"நாங்கள் அழகிப் போட்டி க்குப் போய்க் கொண்டு இருக்கிறோம்.

அபசகுனமாக



பேசாதே!" கடுமையாகக் கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும் வெட்டுக்கிளியும் முகம் திரு ப்பி சென்று விட்

முயல் குருவி அருகே தயங்கி நின்றது.

பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக்

டிக்குசென்றது.

அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

"அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன். இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன் என காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.

அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது.

"முயல்தான் அழகு ராணி. இதை அழகு ராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப்படுகிறேன்!

குருவி என் நண்பன் தான். ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள் என காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்ட கோணலாகின.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையால் சுத்திகரிக்கப்பட்ட மனசாட்சியே, அனைத்திலும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷம் ஆகும்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சாந்தனுக்கு ஏற்பட்ட கதி எம் அவலத்தின் ஓர் அடையாளம்

ஈழத் தமிழ் மக்களுக்கு என்ன? பிரச்சினை என்று கேட்கக் கூடியவர்கள் இன்னமும் உலக அரங்கில் இருக்கவே செய்கின்றனர்.

அத்தகையவர்களின் கேள்விக்கு சாந்தனைச் சுட்டிக் காட்டுவதுதான் அவர்களுக்கு நாம் கொடுக்கும் பதிலாக இருக்கும்.

ஆம், நீதிமன்றத்தின் உத்தரவில் விடுதலை பெற்ற சாந்தன் உயிரோடு தன் தாயகம் வரமுடியவில்லை. பெற்ற தாயைப் பார்க்க முடியவில்லை.

நீதிமன்றம் விடுதலை செய்து வருடங்கள் கடந்த போதிலும் அவரை அவரின் தாயகத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை எவரும் செய்யவில்லை எனும்போது, எம் தமிழ் இனத்தின் நிலைமை எப்படியாக இருக்கிறது என்பதை இதிலிருந்தேனும் புரிந்து கொள்ள முடியும்.

உண்மை. ஈழத் தமிழ் மக்கள் படுகின்ற துன்பம் கொஞ்சமல்ல. சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களை அடக்கி ஆள நினைக்கிறது. அவர்களின் உரிமைகளை மறுக்கிறது என்பதுதான் நிதர்சனமானது.

சிறையில் இருந்து விடுதலை பெற்ற சாந்தன் இலங்கையின் பெரும்பான்மை இனத்தவராக இருந்தால், அவரை இலங்கை அரசாங்கம் இங்கு அழைத்துவரத் தாமதிக்குமா என்ன?

ஆனால் அவர் ஒரு தமிழர் என்பதால் அவரை இங்கு அழைத்து வருவதில் ஆட்சித் தரப்பு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேநேரம் ஆட்சியாளர்களுடன் சேர்ந்திருக்கக்கூடிய தமிழ்த் தரப்புகளும் சாந்தனை தாயகத்துக்கு அழைத்துவர வேண்டுமென நினைக்கவில்லை.

இதன் காரணமாக, பெற்ற தாயைப் பார்க்க வேண்டும் என்ற தன் ஆசையை சாந்தனாலும் பெற்ற மகனை ஒருமுறையேனும் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலை சாந்தனின் தாயாலும் நிறைவு செய்ய முடியவில்லை.

இங்கு இப்போது தமிழ் அரசியல் தரப்புகள் கட்சி புற நீங்கலாக, சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தினாலும் அவர்களும் சாந்தனைத் தமிழகத்திலிருந்து தாயகத்துக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்ற உண்மையை இங்கு கூறித்தானாக வேண்டும்.

சுருங்கக்கூறின் சாந்தனைத் தாயகத்துக்கு அழைத்து வருவதில் இந்திய – இலங்கை அரசுகள் மட்டுமல்ல. தமிழகத்தின் மாநில அரசும் நம் அரசியல் தரப்புகளும் கருசனையற்றவர்களாக இருந்தனர் என்பதுதான் உண்மை.

இப்போது ஆளுக்கு ஆள் குற்றச்சாட்டுக்களை அடுக்கலாம். ஆனால் சாந்தனின் விடயத்தில் தாங்கள் தலையிடுவது தமது கட்சி அரசியலைப் பாதிக்கும் என்ற உள் நினைப்பு நம் தமிழ் அரசியல் தரப்புகளிடம் இருந்துள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

இதை நாம் கூறுவது சாந்தனின் விடயத்தில் மட்டுமல்ல, பொதுவில் தமிழ் மக்களின் அத்தனை இன்னல்களிலும் நம் தமிழ் அரசியல் தரப்புகள் சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்கின்றன என்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

இந்த உண்மையை நாம் கூறும்போது தமிழ் மக்களின் இன்னல்களைத் துடைப்பதற்கு ஆன தமிழ் அமைப்புகள் இல்லை என்ற யதார்த்தம் இங்கு உணரப்படுகிறது.

கூடவே தமிழக மாநில அரசுடன் – தமிழக அரசியல் தரப்புகளுடன் கூட, எம் தமிழ் அரசியல்வாதிகளுக்குத் தொடர்பு இல்லை. அவ்வாறு தொடர்பு இருந்தாலும் அது அவர்களின் சொந்த அரசியல் நலனுக்காக மட்டும் பயன்படுவதாகவே இருக்கிறது.

இங்குதான் சாந்தனுக்கு ஏற்பட்ட கதி, நம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களின் ஓர் அடையாளம் என்பதை மட்டும் இங்கு அறுதியிட்டுக் கூற முடியும்.

# மத்திய வங்கியின் நிதி அதிகாரத்தை குறைக்க பாராளுமன்றில் சட்டமூலம்

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இம் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள சட்டமூலத்தின் அடிப்படையில் மத்திய வங்கி உட்பட அரச நிறுவனங்களின் நிதி அதிகாரங்கள் குறைக்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கையானது மத்திய வங்கியின் ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை நீக்கி, அந்த அதிகாரம் நிதியமைச்சு மற்றும் பாராளுமன்றத்திடம் வழங்கப்படும் என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதன்படி, மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு அண்மையில் முன்மொழியப்பட்ட சம்பள உயர்வு ரத்து செய்யப்படும் என்றும், எனினும் நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்து நியாயமான சம்பள உயர்வு குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்மொழியப்படவுள்ள யோசனையின் கீழ், அரச நிறுவனங்களுக்கு நிர்வாக அதிகாரங்கள் மற்றும் நிதிக்கொள்கைகளைத் தீர்மானிக்கும் அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்படும்.

அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான அதிகாரங்கள் நிறுவனங்களுக்கு வழங்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள நிலையில் அரச நிறுவனங்களின் நிதி அதிகாரங்கள் குறித்து சரியான விளக்கம் இல்லை என்றும், அதன் மூலம் அவர்களில் பலர் பாராளுமன்ற அதிகாரங்களைப் புறக்கணிக்க முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்களுக்கு நாளை விளக்கமளிக்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஏனைய அமைச்சர்களும் பாராளுமன்ற நிதி அதிகாரங்களைப் பேணுவது தொடர்பான யோசனைகளை சமர்ப்பிக்கவுள்ளனர் என்றும் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ந-7)

## 2023 ஆம் ஆண்டு மின்சார சபைக்கு அதிகளவு இலாபம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை 2023 ஆம் ஆண்டில் அபரிதமான இலாபத்தை அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

2023 டிசம்பர் 31ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கையின்படி 61.2 பில்லியன் ரூபாய்களை இலங்கை மின்சார சபை இலாபமாகப் பெற்றுள்ளது.

ஏனைய முதலீடுகளையும் சேர்த்து 75.7 பில்லியன் ரூபாய்களை சபை இலாபமாக பெற்றுள்ளது. இதில் கடந்த ஒக்டோபர் முதல் 18 வீத கட்டண அதிகரிப்பினால் 21 பில்லியன் ரூபாய்கள் இலாபமாக கிடைத்துள்ளன.

பெரும்பாலும் கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் அதிக இலாபம் கிடைத்துள்ளது.

செப்டெம்பர்மாதம்முதல் நாடு முழுவதும் பெய்த கன மழையினால் இவ்வாறான வருமானம் சாத்தியமாகியுள்ளதாகத் தொழிற்துறை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். (ந-7)

## உலகப் பொறியியலாளர் தினம் இன்று விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலகப் பொறியியல் தினமாகிய இன்று மார்ச் 4 ஆம் திகதி, **அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய பொறியியல் நுட்பங்கள்** என்பது தொடர்பான Zoom இணையவழிக் கருத்தாடல் இன்று இரவு 7.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதில் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக பொறியியல் துறைப் பேராசிரியர் எந்திரி அ.அற்புதராஜாவும்

கட்டுமானங்களின் அடிப்படை பொறியியல் நுட்பம் என்ற பொருளில் எந்திரி அ.புஸ்பராஜாவும்

வினைத் திறனான மின்சாரப் பாவனை எனும் பொருளில் எந்திரி நா.சிவகரனும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இந் நிகழ்ச்சிகளை எந்திரி ச.சர்வராஜா தொகுத்து வழங்கவுள்ளார்.

இக் கருத்தாடலில் Meeting ID:983 76026110 passcode:fz3Pe&#v என்ற zoom இணைய வழியூடாகப் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## நாமல் தலைமையில் நாற்பது எம்.பிக்கள் எதிர்க்கட்சியில் அமர்வர்?

எதிர்வரும் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் தலைமையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த நாற்பது உறுப்பினர்களை எதிர்க்கட்சியில் அமர வைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அரசாங்கத் தலைவர்கள் அல்லாதவர்களுக்கும் பொது ஜன பெரமுனவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பொதுஜன பெரமுன கட்சி எடுத்த இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் பொதுத் தேர்தலில் எவருக்கும் வேட்புமனு வழங்காமல் இருப்பது குறித்தும் அக்கட்சி கவனம் செலுத்தியுள்ளது.

மேலும், சுமார் இருபது எம்.பிக்கள் ஏற்கனவே அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க் கட்சியில் அமர்வதற்கு தயாராக உள்ளதாகவும், அந்த எண்ணிக்கை நாற்பதாக அமையலாம் என்றும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் நாமல் ராஜபக்சவின் கருத்தின் படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பி.க்கள் தற்போது எதிர்க்கட்சிக்கு செல்லும் எண்ணம் இல்லை என தெரிவித்துள்ளார். (ந-7)

## தாவடியில் விபத்து பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாவடிச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் விபத்துக்குள்ளானதிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## இலங்கையின் அரிசிக்கு கென்யாவில் கிராக்கி

(கொழும்பு)

கென்யா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட பல நாடுகளில் இலங்கை அரிசிக்கான கேள்வி அதிகரித்து வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கென்யாவிலிருந்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசிக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மத்திய கிழக்கின் பல நாடுகளும் கீரிச் சம்பா அரிசிக்கான கோரிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

14



'தமிழ்' என்ற இந்தச் சொல்லை நீங்கள் ஒலித்தீர்கள் என்றால் இங்கு நான் மனதில் நிலைத்து எழுத்தில் பதிந்த குறியீட்டிற்கான அதே ஒலியை மீண்டும் நீங்கள் உச்சரித்திருப்பீர்கள். ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர். இவ்வெழுத்துக்களுக்கே தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.




### கண்ணெழுத்து

பழங்கால தமிழகத்தில் ஏற்றுமதியாளர்கள் பண்டப் பொதிகளின் மீது சரக்கின் பெயரையும் அளவையும் படமாக வரைந்தனுப்பிய செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது. இவ்வாறு அடையாளம் காட்டி எழுதப்படுவது கண்ணெழுத்து எனப்படுகிறது. அரசு கடிதங்களுக்கு மன்னர்களின் திருமுகங்களை மறை வடக்கமாக முத்திரையிட்டு அனுப்பினர். சிலப்பதிகார மாதவியும் சீவகசிந்தாமணி காந்தருவதத்தையும் இவ்வாறு தங்கள் கடிதங்களுக்கு முத்திரையிட்டு அனுப்பினர். எனவே கண்ணெழுத்து என்பது அடையாள எழுத்து அல்லது குறியீட்டெழுத்து எனலாம். அரசனது திருமுகங்களை எழுதி அதன் மேல் அரச முத்திரையிடுவோர் கண்ணெழுத்தாளர் எனப்பட்டனர்.

குறிப்பு- வேறு யாரும் அறியாமல் குறிப்பிட்ட நபர் மட்டுமே படிக்கக் கூடிய வகையில் அமைந்த எழுத்துகள் சங்கேத எழுத்து அல்லது கரந்தெழுத்துக்கள் என அழைக்கப்பட்டதை இலக்கியங்கள் காட்டுகின்றன.

### சிந்துவெளி எழுத்து- தமிழ் எழுத்து

கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளித் திராவிட மக்கள் கொண்டிருந்த மொழியே தென்இந்தியத் தமிழரும் கொண்டிருந்தனர் என்றும் இந்தியா முழுவதிலும் ஆரியர் வருகைக்கு முன்பு தமிழ்மொழி ஒரே வகையில் வளர்ச்சி அடைந்து வந்தது என்றும் கருதப்படுகிறது. சிந்துப் பிரதேசத்தில் காணப்பெற்ற சங்கேதக் குறிகளே நாளடைவில் விக்ரமக்கோல் என்னுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டில் கண்ட வடிவம் பெற்றன. அவையே பின்னர் பிராமி எழுத்துக்களாக மாறின என்றும் கூறப்படுகிறது.

பிராமி எழுத்திலிருந்து வேறு மாறுதல்களுடன் வடமொழிக் குறிகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றிலிருந்து கிரந்தம், கிரந்தத் தமிழ் வளர்ச்சியடைந்தன என்றும் கூறப்படுகிறது. சிந்துவெளியில் காணப்படும் சித்திர சங்கேத எழுத்துக்கள் தமிழ்நாட்டுப் பழைய நாணயங்களில் காணப்படுகின்றன.

சித்திரசங்கேத எழுத்துக்களிலிருந்து தமிழகத்தில் எழுத்துக்கள் தனிமுறையில் தோற்றமாகி வளர்ச்சி பெற்று, வட்டெழுத்து என்ற நிலையை அடைந்திருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்த தமிழ் எழுத்துகள் மறைமலையடிகள், ஈ.வே.ராமசாமி போன்ற பல பெரியோர்களின் முயற்சிகளுடன் தற்போதுள்ள தோற்றம் பெற்று விளங்குகிறது எனலாம்.

### பிராமி எழுத்துமுறை

பிராமி என்பது ஒரு பழங்கால எழுத்து முறையாகும். இது பிராமி குடும்பத்தை சார்ந்த எழுத்து முறைகளிலேயே பழையதும் மூலமுமான எழுத்து முறையாகும். இது பழங்காலத்தில் தெற்காசியா முழுவதும் வழக்கத்தில் இருந்தது. அசோகரின் 3 ஆம் நூற்றாண்டு காலத்திய கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களிலேயே எழுதப்பட்டுள்ளன.

இதுவரையிலும் பிராமி எழுத்துக்களின் மிகப் பழைய கல்வெட்டுக்கள் இவையே என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் அண்மையில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் கி.மு 6 ஆம் நூற்றாண்டு காலத்திய கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எனவே பிராமி எழுத்து முறை இன்னும் பழைமையானவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பிராமி எழுத்து முறையிலிருந்தே பெரும்பான்மையான தெற்காசிய, தென்-கிழக்காசிய மொழிகளின் எழுத்து முறை தோன்றின. தற்காலத்து இந்தோ-அரேபிய எண் முறையும் பிராமி எண் முறையிலிருந்தே தோன்றியது.

இந்த குடும்பத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த எழுத்து முறை தேவநாகரி ஆகும். இவ்வெழுத்து முறை இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் ஹிந்தி, கொங்கணி, மராத்தி, நேபாளி, நேபாள் பாஸா, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை எழுத பயன்படுத்தப்படுகிறது.

வடபிராமி எழுத்து முறைகளுள் தேவநாகரியை போல் முக்கியத்துவம் வாய்ந்த எழுத்து முறை கிழக்கு நாகரி ஆகும். கிழக்கு நாகரி வங்காளமொழி, அசாமிய மொழி மற்றும் பிஷ்ணு பிரியாமணிப்பூரி ஆகிய மொழிகளை எழுத பயன்படுத்தப்படுகிறது. இதேபோல் பிற இந்திய மொழிகளான ஒரியா, குஜராத்தி மொழிகளும் பிராமிய எழுத்து முறைகளையே கொண்டுள் என.

### தமிழ் பிராமி

சங்ககாலத் தமிழ் எழுத்துக்கள் தமிழி, தமிழ் பிராமி, பழந்தமிழ் என்று பலவாறாக அழைக்கப் பெறுகின்றன. அவற்றுக்கான காரணம் பின்வருமாறு: வடஇந்திய பிராமி எழுத்துக்களுக்கும் சங்ககாலத் தமிழகத்தில் வழக்கத்திலிருந்த எழுத்துக்களுக்கும் உருவ அளவில் ஒற்றுமை இருப்பினும் பல வேறுபாடுகள் உள்ளன. "தமிழி" யில் கூட்டெழுத்து முறை கள் இல்லை.

"அ" கரத்தை நீக்குவதற்காகப் புள்ளி பயன்படுத்தப்பட்டது. அது போல் தமிழ் எழுத்துக்களில் உள்ள ழ, எ, ற, ன வடிவங்கள் வட இந்திய பிராமியில்இல்லை. இந்தியாவில் பிற பத்திகளில் கிடைக்கும் பிராமி எழுத்துகள் பிராகிருத மொழியில் (புத்த தர்மத்தை போதிப்பனவாக) இருக்கும் பொழுது தமிழ்நாட்டில் தமிழ் மொழி மட்டுமே பயன்படுத்தப் பெற்றுள்ளது. எனவே தமிழகத்தில் கிடைக்கும் பிராமி எழுத்துக்களை வடஇந்திய பிராமியிலிருந்து வேறுபடுத்தி உணர்த்தும் பொருட்டு இவை தமிழ் பிராமி அல்லது தமிழி என்று அழைக்கப்படுகிறது. இதையே நாம் சங்ககாலத் தமிழ் எழுத்துக்கள் என்றும் அழைக கிறோம்.

இந்தச் சங்ககாலத் தமிழ் (தமிழி) எழுத்துக்கள் இது நாள் வரை சுமார் 32 இடங்களிலிருந்து 94 குகைக்கல் வெட்டுகளும் ஏறக்குறைய 25 தொல்லியல் வாழ்விடப் பகுதிகளிலி ருந்து 250 இற்கும் மேற்பட்ட பானை கீறல களும் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன.

இவை தவிர முத்திரைகளிலும் மோதிரங்களிலும் காசுகளிலும் இவ் வெழுத்துக்கள் கிடைத்துள்ளன. இவ்வெழுத்துக்களிலிருந்தே 3-4 ஆம் நூற்றாண்டிலிருந்து வட்டெ முத்துக்களும் 7 ஆம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துக்களும் தோற்றம் பெற்றுள் என.




(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா...

சாங்கத்தின் சார்பில் மேலும் உரையாற்றிய அவர்,

ஐக்கிய நாடுகள் சபை கடுமையான மனிதாபிமான நெருக்கடியை எதிர்நோக்கி வரும் வேளையில் தெளிவற்ற நோக்கத்துடன் இவ்வாறான பயனற்ற பொறிமுறையை நிறுவுவது சபையின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணானது.

ஒரு சிலரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதிலிருந்து இலங்கை மக்களுக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை.

அத்தோடு அண்மைக்காலமாக இலங்கை அரசாங்கம் எதிர்கொண்ட சவால்கள் வெற்றி கொள்ளப்பட்டுள்ளதுடன் நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளை மீட்டெடுப்பதிலும் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

"கடுமையான தடைகள் இருந்தபோதிலும், தேசிய ஒருமைப்பாடு, மோதலுக்குப் பிந்தைய நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் அடித்தளங்களை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை விரைவுபடுத்துவதில் எங்கள் இலக்குகள் உறுதியாகவும் அசையாமலும் உள்ளன.

உண்மை, நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சட்டமூலம் ஜனவரி 1, 2024 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதற்காக பொதுமக்களின் கருத்துக்கு போதுமான அவகாசம் அளிக்கப்பட்டது.

அதன் பின்னரே அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

காணாமல்போனோர் அலுவலகத்தின் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை பெறப்பட்ட 6 ஆயிரத்து 25 முறைப்பாடுகளில் 5 ஆயிரத்து 221 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

பதினாறு பேர் உயிருடன் இருப்பதும், மேலும் மூன்று பேர் காலமானமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஐ.நாவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி, ஆயிரத்து 313 குடும்பங்களுக்கு காணாமல்போனோர் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் செல்லுபடியாகும் காலத்தை 2028 வரை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு 41.2 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் இழப்பீட்டு அலுவலகம் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இலங்கை மீதான ஐ.நாவின் பிரேரணையினை தாம் நிராகரிப்பதாகவும் தனிப்பட்ட ஒரு சிலரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## ஜனாதிபதித்...

எக்காரணம் கொண்டு ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது எனவும் தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

ஏனைய தேர்தல்களை நடத்துவது சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரடியான அதிகாரங்கள் இல்லை.

உதாரணமாக பிரதேச சபைகளின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் எனக் கூறப்பட்டாலும் துறைக்கு பொறுப்பான அமைச்சருக்கு அவசியமாயின் தேர்தலை ஒரு வருடத்திற்கு முன்னர் நடத்தலாம். அத்துடன் பிரதேச சபையின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கலாம்.

அதேபோல் பாராளுமன்றத் தேர்தலை எடுத்துக்கொண்டால், பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் எனக் கூறப்பட்டாலும் ஜனாதிபதிக்கு தேவையானால் இரண்டரை வருடங்களில் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த முடியும்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் அப்படியல்ல. அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள். அதனை நீடிக்கும் ஏற்பாடுகள் அரசியலமைப்புச் சட்டத்தில் இல்லை.

இதனடிப்படையில், இந்த வருடம் செப்ரெம்பர் 18ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு இடையில் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் [illegible] யாளர் தெரிவித்தார். (ந-7)

## வற் வரியைக்...

வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, எரிபொருள், மின்சாரம், எரிவாயு உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஏப்ரல் மாதத்தில் குறையக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், இந்த மாதம் எண்ணெய் மற்றும் மின்சார மானியங்களை வழங்க அரசாங்கம் முன்னதாக திட்டமிட்டிருந்தது.

நாட்டில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுடன் டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி அதிகரித்தப் போக்கும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அவசர...

சென்னைக்கு சென்றிருந்தவேளை, திடீரென உடல்நிலை பாதிப்படைந்ததன் காரணமாக நேற்று முன்தினம் அவர் அவசரச் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-7)

## 'தாயின்...

நிகழ்வின்போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"2005ஆம் ஆண்டு முதல் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக தொடர்ச்சியாக வழக்காடி வருகின்றேன்.

சுமார் 32 ஆண்டுகளுக்கு பின் விடுதலை செய்யப்பட்ட போது சாந்தன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். எனினும், சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட போது மிகவும் துன்பத்திற்கு ஆளானார்.

ஆறு மாதங்களுக்கு பிறகு சாந்தனின் உடல் மெலிந்து காணப்பட்டது.

அவருக்கு சிகிச்சையளிக்க முருகன் வற்புறுத்தினார். ஆனால் சாந்தன் "எனக்கு ஒன்றுமில்லை, என் அம்மா கையால் ஒரு வாய் சாப்பிட்டால் போதும்" என்றார். அது தான் அவர் கூறிய ஆசை வார்த்தையும் கூட.

நான் ஊருக்கு போய் அம்மாவின் கையால் ஒரு கை சாப்பிட்டால் போதும், எனக்கு எந்தநோயும்வராது" [illegible] கூறினார்.

எனினும், அவருக்கு ஏற்பட்ட உடல் நலக் குறைவு காரணமாக சென்னை ராஜிவ் காந்தி அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சாந்தனை காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. எப்படியாவது ஊருக்கு அனுப்பி விடலாம் என்ற நம்பிக்கையும் இருந்தது. அதற்கான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

ஆனாலும் அத்தனை நடவடிக்கைகளையும் மீறி சாந்தன் உடல்நல குறைவால் கடந்த 28ஆம் திகதி காலை உயிரிழந்தார்" எனச் சட்டத்தரணி புகழேந்தி வருத்தத்துடன் தெரிவித்துள்ளார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

தன நிதானய
திகதி - 2024.03.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1438
N 09 37 39 69 N
46999

மஹஜன சம்பத
திகதி 2024/03/03
சீட்டிழுப்பு இலக்கம் 5408
Q 5 3 2 7 8 3

மெகா பவர்
திகதி 03/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1756
R 07 26 36 55 80
71634

லக்கி 7 VIP
திகதி 2024.03.03
சீட்டிழுப்பு இலக்கம் 0234
N 8 3 3 6 9 4 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3650
சீட்டிழுப்பு திகதி 03.03.2024
C 05 16 31 47
C 05603

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.03
சீட்டிழுப்பு இலக்கம் 0717
ரிஷபம் 09 12 16 22 ரிஷபம்
57143 11

சுப்பர் பால் SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2382 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 03.03.2024 தினம் ஞாயிறு
03 27 34 59 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,011,194.40

சுபிர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
03.03.2024 வெற்றி வாரம் 116 வர்ணம் பழுப்பு
G 5 0 7 9 0 4 X
30,330,572.00

சனிதா
திகதி 2024.03.03 வெற்றி வாரம் 4543
16 24 44 54 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,727,038.80

சசிரி SASIRI
வெற்றி வாரம் 449
2024.03.03
13 | 29 | 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,619,880/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4094 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.03.03 தினம் ஞாயிற்றுக்கிழமை
01 27 41 49 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 9,128,826.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
1558 மஞ்சள் 03.03.2024 ஞாயிறு
L 19 32 48 62 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 509,575,350.20

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2208
சீட்டிழுப்பு திகதி : 2024.03.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,869,473.60
02 30 33 69 V

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19350)

076 825 7716 (ஆகாஸ்)



## மணப்பெண் தேவை

- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1991, விசாகம், Masters in Business Administration, Swiss மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1990, அனுசம், Quantity Surveyor, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1990, ரேவதி, P.hd, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவ குலம், 1985, பூசம், B.Sc (Hons) UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பண்டத்தரிப்பு, இந்து, கௌரவ குலம், 1985, பரணி, Receptionist, Germany Citizen divorce, Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- ஊர்காவற்துறை, இந்து, கௌரவ குலம், 1986, MBBS Doctor UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி, இந்து, கௌரவ குலம், 1987, அத்தம் A/L, Business, France மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவ குலம், 1987, அச்சுவினி, It and Pharmacy Technician, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1988, அச்சுவினி IT Engineering Degree, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நயினாதீவு, இந்து, கௌரவ குலம், 1981, ரோகிணி M.Sc, Computer Science, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (19349)

S.Sharma J.P
Astrologer
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193



## துரித பொதிகள் சேவை

- சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- அவுஸ்திரேலியா விசேட சலுகை உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (19353)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127



## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (19340)
074 17 37 684



## வேலைவாய்ப்பு

கிளினிக் உதவியாளர்கள், குழந்தை பராமரிப்பாளர், வெயிட்டர், சாரதி (Driver), பக்கிங் செய்பவர்கள், Food Delivery, Nurse, தாதிய உதவியாளர், இனிப்பு பலகாரம் செய்பவர்கள், House keeping

074 138 3368
076 098 4532
(19343)



## Win Repair

உங்கள் குளிர்சாதனப்பெட்டிகளும், சலவை இயந்திரங்களும், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கிறோம். (19335)

076 906 4682


## பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம்

யா/பிளவத்தை அ.மி.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமும் யாப்பு நிறைவேற்றமும் எதிர்வரும் 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்துப் பழைய மாணவர்களையும் குறித்த விசேட பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/பிளவத்தை அ.மி.த.க பாடசாலை.
(C-8460)


V2 VISA SERVICES
கனடா Visit Visas
077 77 20 322
077 77 19 322
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8462)



## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.
சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777
(C-8462)



நட்பின் சிறகுகள்

# இலங்கை வான் படையின் வான வேடிக்கை
# 73ம் வருட பூர்த்தியின் கொண்டாட்டம்
# AIR TATTOO-2024-JAFFNA

SRI LANKA AIR FORCE
GUARDIANS OF THE SKY 1951 - 2024

மார்ச் 6,7,8,9,10 - காலை 10.00 மணி - இரவு 10.00 மணி வரை - யாழ் முற்றவெளி மைதானத்தில்

SALES - EXHIBITION
PROMOTION
FOOD
STALLS AVAILABLE
மேலும் பல விளம்பர சேவைகள்





இலங்கையில் முதல் முறையாக
இந்தக் கொடியில் உங்கள் விளம்பரம் இடம்பெற வேண்டுமா?

யாழ். பாடி
தங்குமிடம் - யாழ் உணவகம்
Yarl Pardy
Rooms JAF TRAD RESTAURANT
51, Amman Road, Nallur, Jaffna.
021222 6868 | 0777 34 0026

+94 713 092 525
+94 767 601 171
+94 759 360 370 (யாழ்.)

PROMOTERS
Iron Brit International (Pvt) Ltd
55/5, Alwis Place,
Colombo-03.
(C-8450)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.